THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Most of these prisoners are confined in the jails in the State for the offences committed inside the State. If their nativity—as the word used is nativity—place of birth is in the other State and if the offence is committed inside the State, they are confined in our State. If the other State Government is willing to take them, we are prepared to send them back. That is only on reciprocal basis, please remember.

MR. SPEAKER: Thiru Sivaswamy.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: On a point of further explanation to the supplementary question put by the Hon. Member Thiru Ganesan. Some years back you must have read in the newspapers there was one Sarala Sella *alias* Chandra —Car Mohini—she came from Karnataka. But the Car Mohini is confined in the jail in Tamil Nadu State because the offence was committed inside Tamil Nadu.

திரு. செ. சிவசாமி: அவசரநிலை காலத்தில் மதிப்பிற்குரிய ஷேக் அப்துல்லா அவர்கள் நம் மாநிலத்தில் சிறைவைக்கப் பட்டதாகத் தெரிகிறது. அவர்கள் எந்தச் சிறையில் இருந் தார்கள், எவ்வளவு காலம் இருந்தார்கள், எவ்வளவு செலவாயிற்று என்று சொல்லப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Government needs notice.

பம்புசெட்டுகளுக்குக் கடன் உதவி.

*406 வினு—திரு. ர. ஜெபமணி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்கும் வரை அரசு கடன் வசூல் நிறுத்திவைக்க உத்தேசமுண்டா?

(ஆ) அந்த இடைக்காலத்துக்கு வட்டி இல்லாமல் வசூலிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு க. உரா. எட்மண்ட்: (அ) இல்லை. இருந்த போதிலும், மின் இணைப்புக் கிடைக்காத புதிய கிணறும் பம்பு செட்டும் சேர்ந்த அல்லது கிணற்றை ஆழப்படுத்தவும் பம்பு செட்டும் சேர்ந்த கடனுக்கு தவணையை செலுத்த கடன்

1978 மார்ச் 6]

வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு ஆண்டு காலச் சலுகை அனுமதிக்கப்படுகிறது. மின் இணைப்பு முற்றுப்பெருத தவிர்க்க முடியாத இனங்களில் கடன் தவணை செலுத்த அதிகப்பட்சமாக 23 மாதங்கள் அனுமதிக்கப்படுகின்றது. கடன் பம்புசெட்டுக்கு மட்டுமானல் சலுகை காலம் அனுமதிக்கப்படுவதில்லை.

(ஆ) இல்லை.

திரு. ர. ஜெபமணி: சபாநாயகர் அவர்களே, விவசாயிகள் கிணறு வெட்டிவிட்டு தண்ணீர் இல்லாமல் அவர்கள் கரன்ட் கேட்கவில்லை. தண்ணீர் நிறைய இருந்தாலும் கொடுப்பதில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். ஆனல் அரசாங்கத்திலிருந்து கிணறுகள் வெட்டுவதற்கு கடன் கொடுத்திருக்கிருர்கள். பம்ப்செட்ஸ் வைக்கவும் கடன் கொடுத் திருக்கிருர்கள். ஆனல் கரன்ட் கொடுக்காமல், அந்தக் கடனை வசூலிப்பதில் அதைக் கொஞ்சம் தள்ளி வைத்திருக்கிறோம் என்று சொல்கிருர்களேதவிர வட்டியோடு சேர்த்து நன்ருக வசூலித்து விடுகிருர்கள். தவறு அரசாங்கத்தினுடையதே தவிர கிணறு வெட்டியவர்கள் தவறு அல்ல. மின் இணைப்பு கேட்டால் நீலத்தடி நீர். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரியவர், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ர. ஜெபமணி: ஆகவே நிலத்தடி நீர் இல்லையென்று சொல்லக்கூடியவர்கள் ஆயில் என்ஜின் வைத்து தண்ணீர் எடுப்பவர் களுக்கு அனுமதி கொடுக்கிருர்கள். அப்படி ஆயில் என்ஜின் வைக்கமுடியாதவர்களுக்கு கரன்ட் கொடுப்பதுவரை கடன் வசூல் செய்வதை ஒத்திவைக்க வேண்டும், வட்டியை நீக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தலைவர் அவர்களே, வட்டியை நீக்க முடியாது என்று நான் ஏற்கனவே மூலக் கேள்விக்குப் பதில் சொல்லி விட்டேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பம்பு செட் வாங்குவதற்கு லோன் வழங்கப்படுகிறது, கிணறு வெட்டு வதற்கும் லோன் வழங்கப்படுகிறது. இந்த இரண்டும் சேர்ந்து

ஒரு வருடத்திற்கு 2000 ரூபாய் வரை தவணை வருகிறது. மகசூல் கிடைப்பதற்கு முன்பு கூட இந்தத் தவணையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் கடன் பெற்று தொழிற் சாலையை ஏற்படுத்தி தொழிற்சாலை இயங்க ஆரம்பித்து உற்பத்தி செய்த பின்தான் தவணை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுத்த பின்தான் கடன் தவணை வசூலிக்கப்படும் என்பதை அரசு ஒத்துக்கொள்ளலாம். அரசாங்கம் ஏன் இதில் பிடிவாதமாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: கடன் வசூலை ஒத்தி வைக்கலாம் அதாவது கடன் தவணையை ஒத்திவைக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றிருப்பதற்கு காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் அவகாசம் கொடுத்தால் கூட்டுறவுத் துறைக்கு அதிகமான இழப்பு ஏற்படும் என்பது தான்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இவ்விதம் ஒத்திவைக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் கடன் வழங்குகின்ற உலகவங்கி இதற்கு ஒத்துக்கொள்ள மாட்டோம் என்று சொல்வதுதான் என்று சொல்கிறார்கள். நமது அரசு இப்போது நம்மிடமுள்ள நடைமுறை சிக்கலை எடுத்துச்சொல்லி, மின் இணைப்பு வரும்வரையிலும், விவசாயிகளுக்கு வருமானம் கிடையாது. கம்மலைக்கூட கடன் தவணைக்காக பிடுங்கிக்கொண்டுபோய்விடுகிறார்கள். இவ்விதம் விவசாயிகள் எந்தவிதமான வருமானமும் இல்லாத நிலைமையிலும் கடன் தவணைக்காக நிர்பந்திக்கப்படுவதை நாம் அறிவோம். கொடுத்த கடனுக்குத் தவணைக்கடன், அதோடு வட்டி, வட்டிக்குமேல் வட்டி இப்படி வசூலித்துக்கொண்டிருப்பது முறை தானா? பொதுவாக எங்கு பார்த்தாலும் போராட்டங்கள் நடைபெறுகின்றன, அப்படி போராட்டம் நடைபெறும்போது மைனாரிட்டிகளாக இருக்கின்ற வர்களுக்கு அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றன. அரசு அவற்றுக்கு ஒத்துக்கொள்ளவும் செய்கிறது. அதே போல் இந்த நாட்டில் மெஜாரிட்டியாக இருக்கும் ஏழை விவசாயிகளுக்கு

1978 மார்ச் 6]

பாதுகாப்பு தருகின்ற முறையில், அரசு கருணை கூர்ந்து இவர்களுடைய கோரிக்கையையும் கவனிக்குமா? உலக வங்கியிடம் அவர்கள் போடுகின்ற நிபந்தனைகளைத் தளர்த்திக்கொடுக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: உலக வங்கியோடு பேசி இதற்கான முயற்சிகள் எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டிராக்டர்கள் வாங்கக் கடன்கள்

*407 வினு—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-ம் ஆண்டில் உலக வங்கி, தமிழ்நாடு நிலவள வங்கியின் மூலம் டிராக்டர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் எத்தனை டிராக்டர்களுக்கு எத்தனை விவசாயிகளுக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

(ஆ) இதற்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதம் எவ்வளவு ?

(இ) வட்டி விகிதத்தைக் குறைக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : (அ) 1976 ஆம் ஆண்டு முதல் 1977 அக்டோபர் முடிய உலக வங்கித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவளவங்கியின் மூலம் 1601 டிராக்டர்கள் வாங்க, 1601 விவசாயிகளுக்கு ரூ. 835 இலட்சம் அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இதற்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதம் 9½ சதவிகிதம்

(இ) வட்டி விகிதத்தைக் குறைக்க உத்தேசமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்த டிராக்டர்கள் வழங்குவதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வெளி நாட்டிலிருந்து தயாராகின்ற டிராக்டர்களையும், உள்நாட்டில் தயாராகின்ற டிராக்டர்களையும் சாம் வாங்கி வழங்குகிறோம். இதில் உள்நாட்டில் தயாராகின்ற டிராக்டர்களின் விலை 10 ஆயிரம் ரூபாய் 12 ஆயிரம் ரூபாய்